Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12
விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 224

சனிக்கிழமை 08 ஜூலை 2023

ஆனி 23 ஆம் நாள்



# குருந்தூர்மலையிலிருந்து வெளியேற்ற நீதிபதிக்கு அதிகாரம் இல்லையாம்!

## நாடாளுமன்றத்தில் நேற்று வீரசேகர ஒப்பாரி

**கொழும்பு, ஜூலை 8**

குருந்தூர்மலையிலிருந்து எங்களை வெளியேற்றும் அதிகாரம் முல்லைத்தீவு மாவட்ட தமிழ் நீதிபதியான ரீ.சரவணராஜாவுக்கு இல்லை என்று நாடாளுமன்றத்தில் நேற்று புலம்பித் தள்ளியுள்ளார் முன்னாள் அமைச்சரும் பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர. »11




கொக்குத்தொடுவாய் புதைகுழி

# உண்மையை வெளிப்படுத்துக: முல்லைத்தீவில் போராட்டம்!

முல்லைத்தீவு, ஜூலை 8
கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியிலிருந்து நேற்றுமுன்தினம் மனித எச்சங்களும், உடைகளும் மீட்கப்பட்டுள்ள நிலையில், இந்த மனிதப்புதைகுழி தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்துமாறு முல்லைத்தீவில் »11

## தேசபந்துவின் தடை நீக்கம்!

கொழும்பு, ஜூலை 8
சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத்தடை நீக்கப்பட்டுள்ளது.
காலிமுகத்திட »11



மன்னாரில்

# இராட்சதக் கப்பல் கரையொதுங்கியது!

மன்னார், ஜூலை 8
மன்னார் நடுக்குடா கடற்பகுதியில் இராட்சதக் கப்பலொன்று நேற்றுமாலை கரையொதுங்கியுள்ளது. »11

பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலய

# கும்பாபிஷேகத்தில் 10 பவுண் நகை திருட்டு!

யாழ்ப்பாணம், ஜூலை 8
வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்ற நிலையில், திருவிழாவுக்கு வந்த பக்தர்களிடமிருந்து 10 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. »12

# ஜனாதிபதித் தேர்தல்: எதுவும் நடக்கலாம்!

## அமைச்சர் நிமால் சூசகம்

கொழும்பு, ஜூலை 8
ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எதுவும் நடக்கலாம். எனவே, தேர்தல் அறிவிப்பு வந்த »10

# 48 மணிநேரத்துக்குள் பொலிஸ்மா அதிபர்!

## பிரதமர் தகவல்

கொழும்பு, ஜூலை 8
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் 48 மணிநேரத்துக்குள் பொலிஸ்மா அதிபராக புதிய ஒருவரைப் பெயரிடுவார் என்று பிரதமர் »11

# தேசிய கால்பந்தாட்டம் சம்பியனானது வடக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 8
தேசிய ரீதியிலான கால்பந்தாட்டத் தொடரில் வடக்கு மாகாண அணி சம்பியனானது. »12



தண்ணீரின் இருப்பை வேரறுக்கும்

# சீனித்தொழிற்சாலை இனிப்புள்ள விஷம்!

## வவுனியா பாலைநிலமாகும் ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 8
வவுனியாவில் கரும்புத் தோட்டத்தையும், சீனித் தொழிற்சாலையும் அமைக்கும் திட்டம் மிகமிக ஆபத்தானது. இந்தத் தொழிற்சாலை இனிப்புத் தடவிய விஷம் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி

# அகழ்வாய்வுப் பணிகளில் ஓ.எம்.பி. அலுவலகம் இணைவு

முல்லைத்தீவு, ஜூலை 8

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் அகழ்வாய்வில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் காணாமல் ஆக்கப்பட்டோருடன் தொடர்புபட்டதா? என ஆராயும் பணியில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் (ஓ.எம்.பி.) இணைந்து செயற்படவுள்ளது என சட்டத்தரணி ஜெ. தற்பரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட அகழ்வின்போது மனித எச்சங்கள், உடைகள் அவதானிக்கப்பட்ட நிலையில் அகழ்வுப் பணிகள் மீட்கப்படுக்கப்படுகின்றன. இந்தநிலையில் இனங்காணப்பட்ட மனித எச்சங்களுக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் தொடர்புள்ளதா? என்பது சம்பந்தமான ஆரம்பகட்ட விசாரணை யில் ஒரு தரப்பாக ஓ.எம்.பி. அலுவலகம் இணைந்துள்ளது.

எடுக்கப்படுகின்ற சான்றாதாரங்கள் பாதுகாப்பான முறையில் பேணிப்பாதுகாக்கப்படவேண்டும். அதன் முடிவுகள் வெளிப்படையுடன் மக்களுக்கு அறியத்தர வேண்டும்.

ஏற்கனவே வவுனியா மாவட்ட நீதிமன்றில் தீர்மானிக்கப்பட்டதன்படி மக்களின் பங்களிப்பு, மக்களின் தீர்மானங்கள் ஒவ்வொரு நடவடிக்கையிலும் இருக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளோம் – என்றார். (ச-19)

## பிரபாகரன் உயிருடன் இல்லை கருணா, தயா மாஸ்டர் சாட்சி!

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 8

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் உயிரிழந்துவிட்டார் என்பதற்கு அவருடன் மிக நெருக்கமாக செயற்பட்ட கருணா அம்மான், தயா மாஸ்டர் உள்ளிட்டவர்களே சாட்சி. பாதுகாப்பு அமைச்சிடம் உரிய தகவல்கள் உள்ளன. பாதுகாப்பு நிமித்தமே வெளியிடவில்லை. இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

தற்போது நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்காக சில குழுக்கள் திட்டமிட்டுச் செயற்படுகின்றன. இவ்வாறான குழுக்கள் தொடர்பில் பாதுகாப்புத்துறை மிக உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்துவிட்டார் என்பது உறுதியே. அவருடன் மிக நெருக்கமாகச் செயற்பட்ட கருணா அம்மான், தயாமாஸ்டர் உள்ளிட்டவர்கள் இதற்குச் சாட்சி.பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டே குறித்த ஆதாரங்கள் வெளிப்படுத்தப்படாமலுள்ளன – என்றார். (ச-இ)

## ஊழல் சொத்துகள் இனி அரசுடமையாகும்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 8

சட்டவிரோதமான முறையில் சேர்க்கப்பட்ட சொத்துகள் பிற நாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தால் அந்தச் சொத்துகளை அரசுடமையாக்குவதற்கும், முறைகேடான முறையில் சேர்க்கப்பட்ட சொத்துகளை அரசுடமையாக்குவதற்குமான அதிகாரம் உள்ளது என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

அந்த அதிகாரத்தை, ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவுக்கும், நீதிமன்றங்களுக்கும் வழங்கும் வகையிலான விதிமுறைகள் சட்ட ஏற்பாடுகளில் உள்ளன என்றார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டவரைவு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசின் அமைச்சரவையில் இருந்து நான் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து ஊழல் எதிர்ப்புச் சட்டவரைவுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன. கால மாற்றத்தைத் தொடர்ந்து மீண்டும் அந்தப் பணிகள் என்னிடம் வந்து சேர்ந்துள்ளன. வங்குரோத்து நிலைக்கு ஊழல் பிரதான காரணம் என மக்கள் உறுதியாக வலியுறுத்தினார்கள்.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் ஊழல் எதிர்ப்பு சட்டவரைவை இயற்ற அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியது. ட்ரான்ஸ்பரன்சி நிறுவனம், முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான நீதிக்கான சமூக அமைப்பு உட்படப் பல்வேறு தரப்பினரது ஆலோசனைக்கு அமைய ஊழல் எதிர்ப்புச் சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது – என்றார். (ஒ-இ)

## பரீட்சைகள் எப்போது?

### கல்வி அமைச்சர் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 8

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகள் இடம்பெறும் காலம் குறித்த அறிவிப்பை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வெளியிட்டுள்ளார்.

உயர்தரப் பரீட்சை இந்த வருடத்தின் இறுதிக்கு முன்னர் நடைபெறும் என்று கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த வருடம் டிசெம்பர் மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த சாதாரண தரப் பரீட்சை 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-22)

## 180 நாள் பணிசெய்தால் அரைமாத பணிக்கொடை

### கூறுகிறார் மனுஷ

கொழும்பு, ஜூலை 8

180 நாள்கள் பணிபுரியும் ஒவ்வொரு ஊழியருக்கும் அரைமாத பணிக்கொடை வழங்கப்படவேண்டும் என புதிய தொழிலாளர் சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதென அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நவீன தொழில் உலகுக்கு ஏற்ற வகையில் தொழிலாளர் சட்ட முறைமைக்கமைய புதிய சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்தச் சட்டவரைவு தொழிலாளர் ஆலோசனைச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் 180 நாள்கள் பணிபுரியும் ஒவ்வொரு ஊழியருக்கும் அரைமாத பணிக்கொடை வழங்கல் உள்ளீர்க்கப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போதுள்ள 5 வருட சேவை மற்றும் 15 ஊழியர்களின் வரம்பு என்பன நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-ரி3,இ)



## விடயதானங்களில் தேர்ச்சி அவசியம்

### அமைச்சுகளுக்கு அறிவுறுத்து

நாடாளுமன்றத்தின் எந்தவொரு குழுக் கூட்டத்திலும் பங்குபற்றும் அதிகாரிகள், கலந்துரையாடப்படும் விடயங்கள் தொடர்பில் தேர்ச்சிபெற்றிருக்க வேண்டும். குழு கோரப்படும் கேள்விகளுக்கு தகவல்களை வழங்கும் வகையில்அவர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் என ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் எழுத்துமூலம் இந்த அறிவுறுத்தலை அவர் விடுத்துள்ளாரென ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதில் நிகழ்ச்சி நிரலிலுள்ள விடயங்கள் தொடர்பாகக் குழுவின் உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தேவையான தகவல்களைத் திரட்ட முன் கூட்டி கூட்டங்களை நடத்தவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாத கேள்விகள் அதிகாரிகளிடம் கேட்கப்படும் சந்தர்ப்பங்களில், பின்னர் பதிலளிக்க நியாயமான கால அவகாசம் கோரவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## கடனை மீளச்செலுத்த 12 ஆண்டு அவகாசம்

### இந்தியா திட்டமெனத் தகவல்

கொழும்பு, ஜூலை 8

இலங்கையின் நிதிச்சுமையைக் குறைக்கும் வகையில் கடனை மீளச்செலுத்த 12 ஆண்டுகள் கால அவகாசம் வழங்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

இந்தியாவின் ஏற்றுமதி கடன் உத்தரவாத நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் எம்.செந்தில்நாதன் இதனைத் தெரிவித்துள்ளாரென இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கை, அதன் இருதரப்பு கடன் வழங்குநர்களுக்கு, 7.1 பில்லியன் டொலரை கடனாகச் செலுத்த வேண்டியுள்ளது.

அதன்படி சீனாவுக்கு 2.4 பில்லியன் டொலரும், பாரிஸ் கிளப்புக்கு 1.6 பில்லியன் டொலரும், இந்தியாவுக்கு 1.6 பில்லியன் டொலரும் செலுத்த வேண்டும். அதற்கென சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை பேச்சு நடத்துகின்றது.

மறுசீரமைப்பு நிதிவசதி கிடைக்கப்பெற்ற பின்னர் ஒரு குறிப்பிட்ட காலத்தினுள், குறிப்பாக 3 முதல் 4 ஆண்டுகளில், பெறவேண்டிய கடனை 10 முதல் 12 ஆண்டுகளுக்கு நீடிக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளாரென தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### தமிழர் பிரச்சினை

# சர்வதேச சமூகத்திடம் பேசியே சலித்துவிட்டோம்

## கனேடிய இராஜதந்திரியிடம் விரக்தியை வெளிப்படுத்திய தமிழ்த் தலைவர்கள்

**கொழும்பு, ஜூலை 8**

**இன்று நாம் இலங்கை அரசுடன் பேசிச் சலித்துப் போய்விட்டோம். அதே போல் சர்வதேச சமூகத்திடமும் மீண்டும் இவற்றையே பேசிச் சலித்துப் போய்க்கொண்டிருக்கிறோம் என தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன், ரெலோ இயக்கத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் த.சித்தார்த்தன் ஆகியோர், கனேடிய வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகார பணிப்பாளர் நாயகம் மரியா லூயிஸ் ஹனானிடம் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.**



கனடா இல்லத்தில் நேற்றுமுன்தினம் நிகழ்ந்த இந்தச் சந்திப்பில், இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வெல்ஷ், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பிரதிநிதி சின்னையா இரத்தினவடிவேல், கனேடியத் தூதரக அரசியல் அதிகாரி கோபிநாத் பொன்னுத்துரை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் மனோ கணேசன் வெளியிட்டுள்ள பதிவில், 'பன்மைத்தன்மையைக் கொண்டாடுவது, அதிகாரப் பகிர்வு, 13 ஆம் திருத்தம், மொழியுரிமை மற்றும் சமத்துவம், ஆகியவை பற்றி கனேடியத் தரப்புடன் பயன்தரும் விதத்தில் பேசப்பட்டன' என குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிப் பிரதிநிதிகள், கனேடிய வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரப் பணிப்பாளர் நாயகத்திடம், இந்த நாட்டை சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமான நாடு என தாம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும், இத்தகைய கொள்கையை முன்னெடுக்கும் எந்தவொரு கொழும்பு அரசாங்கத்தையும் தாம் எதிர்த்துப் போராடுவோம் எனக் கூறினர்.

தமது அபிலாசைகள் தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதைப் போன்று, சர்வதேச சமூகத்திடம் எடுத்துக் கூறுவதிலும் சலிப்படைந்து வருகிறார்கள் என்ற தமிழ்த் தலைவர்கள் இன்று கூறியதை தாம் புரிந்து கொள்வதாகவும், அது தமக்கு ஒரு செய்தி என்றும் கனேடியத் தரப்பினர் தம்மை சந்தித்த கட்சித் தலைவர்களிடம் தெரிவித்தனர். (ஒ-இ)

# சீராக விநியோகமில்லை இரணைமடு நீர் விரயம்!

## விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, ஜூலை 8

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு உரிய முறையில் நீர் விநியோகிக்கப்படாமையால் வீண்விரயம் செய்யப்படுகின்றது என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இரணைமடுக் குளத்தின் கீழ் விவசாயத்தை மேற்கொள்ளும் பன்னங்கண்டி கமக்கார அமைப்புக்கு உட்பட்ட பரந்தன் - முல்லை வீதியின் நான்காவது மைல்கல்லை அண்மித்த பகுதியிலுள்ள நெல் வயல்களுக்குப் பாய்ச்சப்படுகின்ற நீர் வீண்விரயமாவதை அவதானிக்க முடிகிறது.

இரணைமடுகுளத்தின் நீர்மட்டம் சடுதியாகக் குறைந்து வருவதால் நெல் அறுவடைக் காலம்வரை போதியளவு நீர் இல்லாமற் போய்விடும். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து நீர் வீண்விரயமாவதைத் தடுக்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-113)

### பட்டப்பகலில்

# நகை மற்றும பணப்பை ஒரேநாளில் அபகரிப்பு!



சாவகச்சேரி, ஜூலை 8

சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை பட்டப்பகலில் வெவ்வேறு இடங்களில் நகை மற்றும் பணப்பை என்பன அபகரிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி கண்டுவில் மேற்கு ஒழுங்கையில் தண்ணீர் எடுத்துவந்த பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர் அணிந்திருந்த இரு தங்கச் சங்கிலிகளை அறுத்துக்கொண்டு தப்பியோடியுள்ளனர்.

அதே வேளை சாவகச்சேரி அ[illegible] வீதியில் பெண்ணொருவர் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு பின்னர் வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிளின் ஆசனம் உடைக்கப்பட்டு உள்ளேயிருந்த பணப்பை திருடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இரு சம்பவங்கள் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் இரு [illegible] ஒரே நபர்களே மேற்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது. (ச-[illegible])

# புதைகுழி அகழ்வில் நீதி கிட்டுவது ஐயமே

## கிளி. [illegible]ாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் [illegible]ங்கம்

[illegible]தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் [illegible]கள் இடம்பெற்று வரும் நிலையில், இங்கு காணாமல் ஆக்கப்பட்டோருக்கு - இறந்தவர்களுக்கு உரிய நீதி கிடைக்குமா? என்பது சந்தேகமே என கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கிளிநொச்சி மாவட்ட காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி கனகரஞ்சினி தெரிவிக்கையில்;

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இறுதிப்போரில் சரணடைந்த மக்கள், போராளிகள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருப்பதாகவே மக்கள் சந்தேகிக்கின்றனர். இது தொடர்பில் உண்மைகள் நீதியான முறையில் வெளிப்படுத்தப்படுமா? என்பது ஐயமே - என்றார். (ச-113)

பருத்தித்துறையில இருந்து யாழ்ப்பாணம் மட்டும் பள்ளிக்கூடப் பிள்ளையளை ஏத்திறதுக்கு ரண்டு பஸ் விடிய வாறது. ஒண்டில பொம்பிளைப் பிள்ளையளும், மற்றதில பெடியங்களும் ஏறி வாறதுக்குத்தான் இப்பிடி ரண்டு பஸ். சீசன் ரிக்கெற் எடுத்து வைச்சிருக்கிற பிள்ளையளுக்கு இந்த ஸ்கூல் சேர்விஸ் பஸ்ஸூகள் தான் கடவுள் மாதிரி. இந்த பஸ்ஸூகள் கையைவிட்டால், பிள்ளையள் அண்டைக்கு பள்ளிக்கூடம் போகாமல் அப்பிடியே வீட்டை திரும்பிப் போகவேண்டியதுதான். அண்டைக்குப் பள்ளிக்கூடம் 'கட்'.

இப்ப கொஞ்சநாளா இந்த ஸ்கூல் சேர்விஸ் பஸ்ஸூகள் அடிக்கடி லேட்டாத்தான் வருகுதுகள். அதால பிள்ளையள் நேரஞ் செல்லத்தான் பள்ளிக்கூடத்துக்கு போகவேண்டியிருக்கு. 'பஸ் வரப் பிந்திப்போச்சு' எண்டு, லேட்டாப் போனதுக்கு பள்ளிக்கூடத்தில காரணம் சொல்லமுடியாது. 'ஒரு பஸ் தானோ இருக்கு? வேற பஸ் இல்லையோ?' எண்டு திருப்பிக் கேப்பினம். இப்பிடி சீசன் ரிக்கெற் எடுத்த நூற்றுக்கணக்கான பிள்ளையளின்ர பள்ளிக்கூட வாழ்க்கைக்கு ஆப்பு வைக்கிறதே, இந்த சீ.ரி.பி. பஸ்காரரின்ர வேலையாப் போச்சுது. இவ்வளவுநாளும் பிந்தியெண்டாலும் வந்த பஸ், இப்ப அடிக்கடி வராமல் விடுகுது. இப்பிடி சொல்லாமல் கொள்ளாமல் பஸ் வராமல் விட்டால், பிள்ளையள் என்ன செய்யேலும் கையில சீசன் ரிக்கெற்றோட, மற்ற சீ.ரி.பி. பஸ்ஸில ஏறினாலும் இவையின்ர பள்ளிக்கூடங்களில போய் இறங்க முடியாது. ஸ்கூல் சேர்விஸ் பஸ் எண்டால், ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் போய்த்தான் கடைசியா பஸ் ஸ்ராண்டுக்கும் போகும். ஆனால் மற்ற பஸ்ஸூகளை நேரா பஸ் ஸ்ராண்டிலதான் கொண்டுபோய் நிப்பாட்டுவினம். அதில இருந்து இறங்கி இன்னொரு பஸ் எடுத்தோ இல்லாட்டி நடந்தோதான் பள்ளிக்கூடம் போகவேணும். அப்பிடிப் போனாலும் லேட்டாத்தான் போக முடியும். அதைவிட பேசாமல் வீட்டை போறது நல்லமெண்டு கனபிள்ளையள் திரும்பிப்போறதுதான் கூட.

பஸ் ஓட ஏலாத அளவுக்கு ஏதும் பிழை எண்டால், நோர்மல் சேர்விஸூக்கு ஓடுற பஸ்ஸை மாத்தி விட்டால் பள்ளிக்கூடப் பிள்ளையள் பதகளிக்காமல் போகலாமெல்லோ. ஏற்கனவே பள்ளிக்கூடத்தை விட்டு பிள்ளையள் இடையில நிக்கிற எண்ணிக்கை கூடிக் கொண்டு போகேக்க, அதை ஊக்குவிக்கிற மாதிரி இப்பிடி பஸ்ஸையும் ஒழுங்கா ஓடாமல விடுறது நல்லவேலையில்லை. இந்தக் கிழமை ரண்டு பஸ்ஸூகள் வரவேண்டிய இடத்தில ஒரு பஸ்தான் ஓடினது. அதால ஒரே பஸ்ஸூக்கையே பெடியளையும், பொம்பிளைப் பிள்ளையளையும் பனங்கிழங்கை மாதிரி அடுக்கி, அடைஞ்சுக்கொண்டு போச்சினம். மூச்சுவிட்டக்கூட இடமில்லை. ஆடுமாட்டைக் கூட அப்பிடி அடைஞ்சு ஒருத்தரும் ஏத்தமாட்டினம். ஆனால் எங்கட அடுத்த தலைமுறை, நாளைய தலைவர்கள் எண்டு மேடையில நாங்கள் புளுகிற, சின்னப் பிள்ளையளை மட்டும் இப்பிடி மனிதாபிமானம் இல்லாமல், ஒரு பஸ்ஸூக்கையே நிக்கவும் இடமில்லாமல் ஏத்துறதும் பிழைதானே? எல்லா பஸ்ஸூம் ஒழுங்கா ஓட, பள்ளிக்கூடப் பிள்ளையளின்ர பஸ்ஸூக்கு மட்டும் ஏன் இப்பிடி அடிக்கடி வருத்தம்?



\- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுப் புகழ்பெற்ற பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் பல்லாயிரம் பக்தர்கள் சூழ நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
நாராயணப் பெருமானுக்கு சதுர் வேதங்கள், திருப்பாசுரங்கள் பக்தர்களால் இசைக்கப்பட - யானை வாகனம் முன்னே வர எடுத்துவரப்பட்ட திருக்கும்ப நீரால் ராஜகோபுரத்தின் பதினொரு கலசங்களுக்கும் குடமுழுக்கு இடம் பெற்றது. (ச-27)



# பொன்னாலை வரதராஜருக்கு குடமுழுக்கு



## அலங்கார உற்சவம்

கொடிகாமம், ஜூலை 8
மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் ஆலய ஆடிப்பூர அலங்கார உற்சவம் எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறவுள்ளது.
எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ச-ரி3-159)

# ‘கடலினை வரைபவள்’ நூல் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 8
நூலாசிரியர் குணாளினி (சாரங்கா) தயாநந்தனின் ‘கடலினை வரைபவள்’ நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.
கவிஞர் சோ.பத்மநாதனின் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன், சிறப்பு விருந்தினராக எழுத்தாளர் திருமதி பிறேமினி பொன்னம்பலம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச-ரி3)

## நாய்களுக்கு ஏ.ஆர்.வி.

யாழ்ப்பாணம், ஜூலை 8
யாழ்.மாநகர பிரதேசத்திலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பான ஏ.ஆர்.வி. தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.
கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணியில் 271 நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.
எதிர்வரும் 10ஆம் திகதி வண்ணார் பண்ணை பொதுச் சுகாதாரப் பிரிவில் தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்படும் என சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது. (ச-17)

யாழ்.மாநகரத்தில் இவ்வருடம்

# டெங்குப் பரிசோதனையில் 20, 933 வீடுகள் தரிசிப்பு

தென்மராட்சி, ஜூலை 8
யாழ்.மாநகரப் பிரதேசத்தில் இந்த ஆண்டின் கடந்த ஆறுமாத காலப்பகுதியில் 20 ஆயிரத்து 933 வீடுகளில் டெங்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
இந்த ஆண்டின் ஆரம்பத்தில் டெங்குத் தாக்கம் கூடுதலாகக் காணப்படும் இடங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. ஜனவரி மாதத்தில் 3 ஆயிரத்து 485 வீடுகளும் பெப்ரவரி மாதத்தில் 5 ஆயிரத்து 102 வீடுகளும் மார்ச் மாதத்தில் ஆயிரத்து 125 வீடுகளும் ஏப்ரல் மாதத்தில் 3ஆயிரத்து 215 வீடுகளும் மே மாதத்தில் 5 ஆயிரத்து 744 வீடுகளும் ஜூன் மாதத்தில் 4 ஆயிரத்து 262 வீடுகளும் சுகாதாரப் பிரிவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டன.
அதேவேளை யாழ். மாநகர பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் மாத்திரம் கடந்த ஆறு மாத காலப்பகுதியில் 236 பேர் வரை டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச-17)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்பு கிடைக்கும். எதிர்பாராத பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு. பெருமை உண்டாகும். லாபம் கூடுதலாக இருக்கும்.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். உறவினர்கள் மூலம் கிடைக்கும் செய்தி மகிழ்ச்சி தரும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மிதுனம் :** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். உடல் நலனில் கவனம் தேவை.

**சிம்மம்:** காரியங்கள் இழுபறியானாலும் முடிந்துவிடும். ஆதாயம் உண்டு என்றாலும் செலவுகளும் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும். உடல் அசதி உண்டாகும் .

**கன்னி:** முடிவுகள் எடுப்பதற்கு மிகவும் உகந்த நாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு எதிர்பாராத பணவரவும், திடீர் செலவுகளும் ஏற்படும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகளால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம் :** மகிழ்ச்சியான நாள். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். மனஸ்தாபம் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும் ஆதாயமும் கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும்.

**மகரம்:** அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கும், திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். வீண் விவாதம் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் சிந்தித்தும் பொறுமையுடனும் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

## கடலட்டைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 8
யாழ்.குடாக் கடற்பரப்புகளில் வளர்க்கப்படும் கடலட்டைகள் இரவு வேளைகளில் திருடர்களால் திருடப்படுகின்றன என கடலட்டை வளர்ப்போர் விசனம் தெரிவித்துள்ளனர்.
பண்ணை, மண்டைதீவு, குருநகர் போன்ற கடற் பகுதிகளில் கடலட்டைகள் வளர்க்கப்படுகின்றன. அங்கு இரவு வேளைகளில் நுழையும் திருடர்கள் கடலட்டைகளைத் திருடிச் செல்கின்றனர்.
அதன்காரணமாக இரவு பகலாக காவலில் ஈடுபட வேண்டியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-17)

# யாழில் கடந்த வாரம் உள்ளூர் உற்பத்தி சூடுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8
யாழ்.நகரில் கடந்த வாரம் உள்ளூர் உற்பத்திகளின் விற்பனை சூடுபிடித்துக் காணப்பட்டது என உள்ளூர் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
கடந்த வாரம் அதிக நாள்கள் கொண்ட விடுமுறையைக் கொண்டாடுவதற்காக தென்னிலங்கையிலிருந்து நூற்றுக்கணக்கானவர்கள் வடக்கு மாகாணத்துக்கு சுற்றுலாவுக்காக வந்திருந்தனர்.



வடக்கு மாகாணத்தில் பல்வேறு சுற்றுலாத் தளங்களையும் வழிபாட்டுத் தலங்களையும் அவர்கள் ஆக்கிரமித்திருந்தனர்.
சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரிப்பால் யாழ்ப்பாணத்து உள்ளூர் உற்பத்திகளுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டதுடன் விற்பனையும் சூடு பிடித்திருந்தது என்று அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். (ச-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதைகுழிகளைக் காக்கும் பூதங்கள்

புத்தர் உயிரிழந்தவுடன் அவரது உடல் எச்சங்கள் எட்டு இடங்களில் புதைக்கப்பட்டன. அந்த எட்டு இடங்களிலும் – புத்தரின் உடல் எச்சங்கள் புதைக்கப்பட்ட மண்ணின் மேல் – செங்கல்லும், மண்ணும் கொண்டு தூபிகள் கட்டப்பட்டன. காலப்போக்கில் அவை அழிந்துபோக, அந்தத் தூபிகளை அசோகச் சக்கரவர்த்தி மீளக் கட்டினான். அந்தத் தூபிகளை வழிபாட்டுக்குரிய தலமாகப் பிரகடனப்படுத்தினான் அசோகன். தூபிகளைப் புதுப்பிக்கும்போது, அந்தத் தூபிகளில் உக்காமல் எஞ்சியிருந்த புத்தரின் பற்கள், கேசம் என்பவற்றில் சிறிதளவை அசோக மன்னன் பத்திரப்படுத்திக் கொண்டான். பின்னர் அந்த தந்ததாதுக்களையும், கேசத்தையும் ஒவ்வொன்றாகத் தன் தூதுவர்கள் மூலம் இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பி, அவற்றைப் பேணும் வகையில் அங்கு தூபிகளை அமைக்கச் செய்தான். பின்னர் பௌத்த துறவிகளின் உடலங்களும் புதைக்கப்பட்டு, அவற்றின் மேல் தூபிகள் எழுப்பப்பட்டன. அவையும் வழிபாட்டுக்குரியவையாக மாறின. இப்படியாக உலகெங்குமுள்ள தூபிகள் எனப்படும் விகாரைகள் தமக்குக் கீழே மனித உடலங்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. அப்படி மனிதர்களின் சடலங்களைக் கொண்டு உருவான விகாரைகள், பெரும் மனிதப் புதைகுழிகளையும் மூடிமறைக்கும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாமோ? என்ற சந்தேகத்தை வெளியிட்டுள்ளார் வடக்குமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன்.

அவரின் சந்தேகத்தில் பல தர்க்கபூர்வமான நியாயங்கள் இருக்கவே செய்கின்றன. இறுதிப்போர் நடைபெற்ற வட்டுவாகல், கேப்பாபிலவு போன்ற இடங்களில் உள்ள இராணுவ, கடற்படைத் தளங்களில் மிகப்பிரமாண்டமான விகாரைகள் எழுப்பப்பட்டுள்ளன. படையினரின் வழிபாட்டுக்காக ஒரு விகாரை அமைக்க வேண்டுமானால், மிகச் சிறிய இடத்தில் புத்தர் சிலைகளை வைப்பதே படையினரின் கடந்தகாலச் செயற்பாடாக இருந்தது. ஏனெனில் படைமுகாமில் உள்ளோரின் வழிபாட்டுக்குத்தான் விகாரையே தவிர, விகாரைக்காக அந்தப் படைக்கட்டுமானங்கள் அமைக்கப்படவில்லை. எனவேதான் தமது படைச் செயற்பாடுகளுக்கும், கட்டுமானங்களுக்கும், காவலுக்கும் இடையூறில்லாதவகையில் மிகச்சிறிய விகாரைகளைப் படையினர் அமைப்பது வழக்கம். ஆனால் அதற்கு மாறாக கேப்பாபிலவிலும், வட்டுவாகலிலும் படைக்கட்டுமானங்களுக்கு நடுவே துருத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரிய விகாரைகள் எவருக்கும் சந்தேகத்தை உண்டுபண்ணவே செய்யும். ஏனெனில் இறுதிப்போரில் மனிதப்படுகொலைகள், சித்திரவதைகள் என்பன இவ்விரு இடங்களிலுமே அதிகமாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. போர்முடிவுக்கு வந்த பின்னும், எந்தவித காரணமுமின்றி வட்டுவாகலிலும், கேப்பாபிலவிலும் மிகப்பெரும் நிலப்பரப்பில் படைத்தரப்பு குந்தியிருக்கிறது. அதற்கான எந்தக் கேந்திர முக்கியத்துவமும் குறித்த இரு இடங்களுக்கும் புவியியல் ரீதியாகவோ, போரியல் ரீதியாகவோ இல்லை. அப்படியானால் ஏன் இத்தனை போராட்டங்கள் நடத்தியும் படைத்தரப்பு சுரணைகெட்டு அங்கு உட்கார்ந்திருக்கிறது?

புதையலைப் பூதங்கள் காப்பதைப் போல, புதைகுழிகளை இவர்கள் காவல் காக்கின்றனர் என்ற சந்தேகம் போர் முடிந்ததில் இருந்து பலருக்குமுண்டு. என்னதான் முயன்றாலும், பல்லாயிரக்கணக்கானோரைக் கொன்றழித்து, புதைத்ததடயங்களை அவ்வளவு எளிதில் வழித்துத்துடைத்து விட முடியாது. எனவே இறுதிப்போரில் கொத்துக் கொத்தாகக் கொலை செய்யப்பட்டு, நிர்வாணநிலையில் உழவியந்திரங்களில் அள்ளிச் செல்லப்பட்டோரின் உடலங்கள் இந்தமுகாம் மண்ணுக்குள் தான் உறங்கிக் கொண்டிருக்கின்றனவா? அந்த மனிதப்புதைகுழிகளை மறைக்கத்தான் – ரவிகரன் சந்தேகப்படுவது போல – அவற்றின் மேல் படைத்தரப்பு விகாரைகளை அமைத்திருக்கிறதா? அவ்வாறு விகாரைகள் மனிதப்புதைகுழிகளின் உருமறைப்பாக அமைக்கப்பட்டால், இனி எக்காலத்துக்கும் அந்த இடத்தை தோண்டவே முடியாது. ஏனெனில் விகாரைகளின் மேல் கைவைக்கும் அதிகாரமும், துணிச்சலும் இலங்கை ஜனாதிபதிக்குக் கூட கிடையாதே. அப்படியிருக்கையில், அந்த விகாரைகளை எவர்தான் அகழ்ந்து, உடலங்களைத் தேட முடியும்? தனது உடலின் மேல் கட்டியெழுப்பப்பட்ட விகாரைகள் பின்னொருநாளில் மனிதப்படுகொலைகளை மறைக்கும் கருவியாக மாறுமென்று புத்தர் கனவிலேனும் எண்ணியிருக்கமாட்டார்.

நாளொரு நல்வார்த்தை

"வாழ்வு என்பது சில நொடியில் முடிந்து போவதல்ல. ஒவ்வொரு நொடியையும் மகிழ்ச்சியாகவும், மனநிறைவுடனும் வாழ்வதாகும்"

- புத்தர்



### வரலாற்றில் முதற்தடவை

# பொலிஸ்மா அதிபரின்றி பொலிஸ் திணைக்களம்

கொழும்பு, ஜூலை 8

**இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக பொலிஸ்மா அதிபர் ஒருவர் இல்லாமல் பொலிஸ் திணைக்களம் இயங்கி வருகின்றது.**

பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவின் பதவிக் காலம் முடிவடைந்து அவருக்கு வழங்கப்பட்ட கால நீடிப்பும் முடிவடைந்துள்ளது.

11 நாள்கள் கடந்த போதிலும் இன்னமும் புதிய பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படவில்லை.

அடுத்த பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கு இன்னும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

பொலிஸ்மா அதிபருக்குத் தகுதியான எவரும் சிபாரிசு செய்யப்படாமையே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-ரி2, 22)



## நடாஷாவுக்கு பிணை

கொழும்பு, ஜூலை 8

சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டதால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நடாஷா எதிரி சூரிய நேற்றுமுன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நடாஷா எதிரிசூரியவின் பிணை கோரிக்கையின் மீள்திருத்த விண்ணப்பம்கொழும்பு கோட்டை நீதிமன்றில் கடந்த புதன்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிணை உத்தரவு வழங்கப்பட்டது. (ச-ரி2)

## பொலிஸ்மா அதிபர் நியமனம் அழுத்தங்கள் எவையும் இல்லை

கொழும்பு, ஜூலை 8

பொலிஸ்மா அதிபரை நியமிக்கும்போது மதம் அல்லது வேறு எந்த அமைப்பினதும் அழுத்தங்களுக்கு அடிபணிய அரசாங்கம் தயாராக இல்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் உரிய நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ-இ)

## பொலிஸ்மா அதிபர் நியமனம்: கர்தினால் இரகசியக் கடிதமாம்

புதிய பொலிஸ்மா அதிபரின் நியமனம் தொடர்பில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், சபாநாயகர் உள்ளிட்ட அரசமைப்புச் சபையின் உறுப்பினர்களுக்கு 3 பக்கங்களைக் கொண்ட இரகசியக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டிருக்கும் இரண்டு பொலிஸ் அதிகாரிகள், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் தங்களது கடமைகளை மீறியுள்ளார்கள். எனவே இவர்களைக் கவனத்தில் எடுக்க வேண்டாம் என்று அனைத்துக் கத்தோலிக்க மக்களின் சார்பிலும் கேட்டுக்கொள்வதாக அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-22)

நாளை

09.07.2023
ஞாயிற்றுக்கிழமை
ஆனி 24

சுபநேரம் : 08.58 - 10.28
ராகுகாலம் : 04.28 - 05.58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசித்தண்ணியை ஊற்றி பழைய கல்வெட்டாகக் காண்பிக்க முயற்சி



## யுனெஸ்கோவின் ஆய்வுக்குத் தயாரா? சிறீதரன் எம்.பி. சவால்

**கொழும்பு, ஜூலை 8**

**முல்லைத்தீவு குருந்தூர்மலையில் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட "கல்வெட்டு" என தொல்லியல் திணைக்களத்தால் ஆதாரமாகக் காட்டப்படும் "செங்கல்" போலியாக உருவாக்கப்பட்டதெனவும், யுனெஸ்கோவையும் சர்வதேச தொல்பொருள் ஆய்வாளர்களையும் அழைத்து ஆய்வு செய்ய அரசு தயாரா எனவும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் அவர் நேற்று முன்தினம்மேலும்தெரிவித்ததாவது, குருந்தூர்மலையில் ஆதி சிவன் ஆலயம் உடைக்கப்பட்டு, அழிக்கப்பட்டு அங்கு புதிய கல்வெட்டு உருவாக்கப்பட்டுள்ளது. அங்கு எவ்வாறு கல்வெட்டு வந்தது? விகாரை அமைக்க முன்னர் நானும் சார்ள்ஸ் நிர்மலநாதனும் குருந்தூர்மலைப் பகுதிக்குச் சென்றிருந்தோம்.

ஆலயங்கள் உடைக்கப்பட்டதை எமது கண்களால் கண்டோம்.

இவ்வாறான நிலையில் புதிய கல்வெட்டு அமைக்கப்பட்டுள்ளது.

சிமெந்துக் கற்களை அறுத்து அதன் மேல் செங்கல் துகள்களைப் பூசி அதனை புராதன கல்வெட்டாக மாற்றியுள்ளார். - இவ்வாறு செய்து விட்டு இது ஒரு பழைய செங்கல், அது 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட செங்கல் என கதை பரப்புகின்றனர். இது அப்பட்டமான பொய். சிமெந்துக் கற்களை கிரவலுக்கு மேலே அறுத்து அந்தக்கிரவலை பழைய கல்லுப் போல் காட்டி அங்கேயுள்ள பாசித் தண்ணியை ஊற்றி அதனை ஒரு பழைய தொல்பொருள் விகாரை போல் காட்டும் முயற்சியில் தொல்பொருள் திணைக்களமும் படைகளும் அரசும் போலி வேலையை செய்தன என்பதை இந்த உயரிய சபையில் நான் பொறுப்புடன் கூறுகின்றேன் - என்றார். (ஒ-இ)

# மூன்று மாதகால மின்சிட்டை ஒரே தடவையில் கையளிப்பு

## இந்திராபுரம் மக்கள் பரிதவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8

மூன்று மாதத்துக்குரிய மின்கட்டணச் சிட்டையை ஒரே தடவையில் வழங்கியதால் அதனைச் செலுத்த முடியாத மின்பாவனையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என பளை - இந்திராபுரம் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

கடந்த மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்குரிய மின்பாவனைக் கட்டணம் கடந்த ஜூன் மாதம் வழங்கப்பட்டது.

பெருந்தொகைக் கட்டணம் ஒரே தடவையில் குறிப்பிடப்பட்டிருப்பதால் அதனைச் சிலர் செலுத்துவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். தற்போது ஜூன் மாதத்துக்குரிய மின்கட்டணச் சிட்டை விநியோகம் இடம்பெறுகிறது.

இந்தநிலையில் மேற்படி மூன்று மாதங்களுக்குரிய மின்பாவனைக் கட்டணம் இதுவரை செலுத்தாத மின்பாவனையாளர்களுக்கு ஜூன் மாதப் பட்டியலுடன் சிவப்பு அறிவித்தலும் வழங்கி அதனைச் செலுத்த ஒருவார கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது. அதனால் பொருளாதாரம் நலிவடைந்த குடும்பங்கள் தமது மின் இணைப்பை இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மாதாந்தம் மின்சிட்டை வழங்கப்பட்டு வந்த நிலையில் தற்போது ஒரே தடவையில் மூன்று மாதங்களுக்குரிய கட்டணச் சிட்டையை வழங்கியமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது - என்றனர். (ச-ரி3-9)



# கீரிமலையில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம் - கருகம்பனை தமிழ்மன்றம், சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து நடத்தும் குருதிக்கொடை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணிவரை கீரிமலை கருகம்பனை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குருதிக்கொடையாளர்கள், ஆர்வலர்கள் பங்கேற்று குருதிக் கொடையளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-ரி3- 66)

# கட்டாக்காலி நாய்களை பராமரிக்க இடமில்லை

## மாநகரசபை ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் காணப்படும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து பராமரிப்பதற்கு போதிய இடவசதி இல்லை. - இவ்வாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கட்டாக்காலி நாய்கள் தொடர்பில் ஆராயப்பட்டிருந்தன. கட்டாக்காலி நாய்களை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பது தொடர்பில் ஆராய்வதற்காக 5 பேர் கொண்ட குழு ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரால் நியமிக்கப்பட்டது. யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன், யாழ். மாநகரசபை ஆணையாளர் த. ஜெயசீலன், வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் வசீகரன் உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் குழு இதுவரையில் கூடி ஆராயவில்லை. இருப்பினும் மாநகரசபையால் எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பில் ஆணையாளர் விளக்கமளித்தார்.

'நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படுகின்றது. வளர்ப்பு நாய்களை வீட்டில் கட்டி வளர்க்க அறிவுறுத்துகின்றோம். யாழ். மாநகரசபை எல்லைக்குள் கட்டாக்காலி நாய்கள் அதிகமாக உள்ளன. தொண்டு நிறுவனங்கள் நாய்களை பராமரித்தாலும் அவர்களால், 200 நாய்களையே பராமரிக்கக் கூடிய இயலளவு கர்ணப்படுகின்றது. போதிய இடவசதி தேவை. அதற்கான இடங்களை ஆராய்கின்றோம்' என்று பதிலளித்தார் ஆணையாளர். (ஒ-125)

# அங்குரார்ப்பணமும் நிர்வாகிகள் தெரிவும்

மட்டுவில் வடக்கு ஊரிப்பிட்டி இந்து மயான அபிவிருத்திச்சபையின் அங்குரார்ப்பணமும் நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் மட்டுவில் வடக்கு கண்ணகை சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் சபையின் தலைவராக கா.சிவஞானசுந்தரம், செயலாளராக ம.தனஞ்செயன், பொருளாளராக செ.சுதாகரன் ஆகியோருடன் மேலும் எட்டு நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-ரி3-9)

# நாட்டைப் பதற வைக்கவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

## சட்டத்தரணி சுவஸ்திகா சுட்டிககாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 8

இராணுவத்துக்கு அதிகாரத்தை வழங்கி - கருத்துச் சுதந்திரம், போராட்டங்களை நசுக்கி - நாட்டை தொடர் அவசரகால நிலைக்குள் வைத்திருக்கும் வகையிலேயே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது என வணிக தொழிலாளர் சங்கத்தின் தலைவியும் சட்டத்தரணியுமான சுவஸ்திகா அருள்லிங்கம் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு மக்களை அடக்கி ஒடுக்கும் வகையில் அமைந்துள்ளது. இன்று பேசிய ஒரு விடயம் நாளை பயங்கரவாதம் எனக் கருதுப்படும். பேச்சுச் சுதந்திரம் நசுக்கப்படும். பேசியவரின் குடும்பமும் கைதுசெய்யப்படலாம். பாதுகாப்பு அமைச்சரின் கையொப்பத்துடன் சுமார் 18 மாதங்கள் வரை தடுத்து வைத்து விசாரணை செய்யமுடியும்.

நாட்டின் தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி எந்தவொரு பாதுகாப்புத் தரப்பும் கைதை மேற்கொள்ள முடியும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் பொலிஸாரை தாண்டி முப்படைக்கும் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் நாட்டை எப்போதும் அவசரகால நிலைமையினுள் வைத்திருக்கவே இது வழிவகுக்கின்றது.

மக்கள் போராட்டத்தை ஒடுக்கி கருத்துச் சுதந்திரத்தை நசுக்கவே இந்தத் திட்டமிடல் மேற்கொள்ளப்படுகின்றது.

இதனை நன்கு விளங்கி அனைவரும் ஓரணியில் எதிர்த்துக் குரலெழுப்ப வேண்டும். (ச-125)

# மின்சாரம் தாக்கி தம்பதியர் சாவு!



கொழும்பு, ஜூலை 8

படுக்கை அறையில் பழுதடைந்த மின்விசிறியிலிருந்து மின்சாரம் தாக்கியதில் வயோதிபத் தம்பதியர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்பு கொலன்னாவவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்துள்ளது. 71 மற்றும் 68 வயதுடைய வயோதிபத் தம்பதியினரே உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். வீட்டுப் பணிப்பெண்ணிடம் வாக்குமூலத்தைப் பெற்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-ரி2-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Vacancy
### உடனடி வேலைவாய்ப்பு

IMS
Institute of Medical Sciences

- பெண் சுத்திகரிப்பாளர் (Cleaner)
- சமையல் உதவியாளர் (Cook Assistant)
- தாதிய உதவியாளர் (Nurse Assistant)

ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்க முடியும்
வயது :- 25 தொடக்கம் 50 வரை
சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும்

Green Memorial Hospital, Manipay

☎ - 0212256990
✆ - 0760477106

## 30ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 12 . 03 . 1941

உதிர்வு 08 . 07 . 1993

அமரர்
### சிதம்பரி மகேந்திரன்
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

நிஜம் என்பது நேற்றானது
நினைவு கனத்து கனவுகள் சுமையானது
நிற்கதியான வெறுமை தட்டிய இடைவெளிகளை
உம் வாழ்நாள் நினைவுகளே நிறைந்து நிரப்புகின்றது.
ஆண்டுகள் முப்பது கரைந்திடினும்
நினைவுகள் மட்டும் உறைந்து கிடக்கின்றது.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நாகம்மாள் வீதி,
உடுவில்

நினைவுகளின் துணையுடன்
குடும்பத்தினர்.

(CS/51139)AH-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 05.02.1944

மறைவு 05.07.2023

### மாணிக்கம் கிருஷ்ணசாமி
(உரிமையாளர் - இலட்சுமிபவான், கிளிநொச்சி)

செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் மடத்தடிச்சந்தி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் கிருஷ்ணசாமி அவர்கள் கடந்த (05.07.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் சாந்தநாயகி அவர்களின் பாசமிகு கணவரும் தேவறஞ்சினி, விமலறஞ்சினி (சுகாதார அமைச்சு- வடமாகாணம்), செல்வறஞ்சினி (பிரான்ஸ்), சந்திரசேகரன் (பிரான்ஸ்), சந்திரகாசன் (உரிமையாளர் - தேனுமலர் சென்ரர்), சாந்தரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜசேகரன், உதயகுமாரி (பிரான்ஸ்), இராகுலன் (பிரான்ஸ்), சுகேதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தேனுஜா, சாருக்கா (பிரான்ஸ்), சிறீகன் (பிரான்ஸ்), இறாகவி (பிரான்ஸ்), இசான் (பிரான்ஸ்), றக்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, சோமசுந்தரம், ஆனந்தராசா, சண்முகநாதன் மற்றும் சீதாலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மடத்தடிச்சந்தி,
பெருங்குளம் வீதி, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
077 6649396 077 9850260

(CR 37221)

## பெயர்மாற்றம்

புலோப்பளை மேற்கு பளையில் வசிக்கும் **பொன்னையா கோணேஸ்வரி** ஆகிய நான் எனது பெயரை **பொன்னையா சிந்துஜா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **பொன்னையா சிந்துஜா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

- பொன்னையா சிந்துஜா -

(CS/51118)AH-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### திரு. மாணிக்கம் கிருஷ்ணமூர்த்தி

மலர்வு 07.12.1959

உதிர்வு 19.06.2022

திதி: (08.07.2023)

பிறப்பவர் எல்லாம் இறப்பவர்
எனினும் சிறப்புயர்வுற்றோர் - என்றும்
சிந்தையில் இருப்பர்

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

(cr.37211) (N.1)

## கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 8

புத்தூர் மந்திரி மலைப்பகுதியில் 3 லீற்றர் கசிப்புடன் 27 வயதுடைய சந்தேக நபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ம-23)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம் நல்லூர், திருநெல்வேலி கொக்குவில் கல்வியங்காடு பகுதியில் அரச உத்தியோகத்தருக்கு வீடு தேவை. அனெக்ஸ் ஆக கொடுக்க இருப்பவர்களும் தொடர்பு கொள்ளவும். **T.P: 076 049 6508**

## Rudram Engineering (Pvt) Ltd.

கட்டட வேலைகளுக்கான மேற்பார்வையாளர்கள் தேவை.
(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

தொடர்பு:-
**077 6498 548**

அம்மன் வீதி,
உடுவில், சுன்னாகம்.

## தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கும் பிரபல ஹாட்வெயர் விற்பனை நிலையத்துக்கு வேலையாள் தேவை.

➤ கணக்காளர் (ஆண்)

**077 040 6905**
**070 640 6905**

(CS/51158)AH-1

## INVITATION FOR BID 2023/01
## CHIEF ENGINEER'S OFFICE, DEPARTMENT OF BUILDINGS (NP) JAFFNA

1. The **Chairman, Regional Procurement Committee** , on behalf of the Chief Engineer , Chief Engineer's Office, Department of Buildings (NP), Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table be low. All the relevant details are described in the same table.
2. **Bidding will be conducted through National** Competitive Bidding Procedure (NCB).

***Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed underthis procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply asstipulated in Public Finance Circular No. 04/2016 (iii) and its amendments " and Public Finance Circulars N o 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted***

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 03 Documents
5. **Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the** bidding documents at the same place on any working days from 09:00 hrs to 15:00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chief Engineer, Chief Engineer's Office, Department of Buildings (NP), Beach Road, Jaffna (T.P:021 222 2632, Fax:021 222 2632) from 9:00 hrs to 15:00 hrs. During the period from 2023.07.10 to 2023.07.24 upon payment of non refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Chief Engineer's Office, Department of Buildings (NP), Beach Road, Jaffna on or before 10.30 am at 2023.07.25** . Bid number must be written on the left hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre Bid Conference will be held at **Conference Hall, of Chief Engineer's Office, Department of Buildings (NP), Beach Road, Jaffna** commencing at 2.30 P.M on 2023.07.17
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2023-07-10 until 2023-07-24 | | | | |
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 2023-07-17 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 2023-07-25 | | | | |
| | | | | | | | Required Bid Security | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | | Security Amount | Validity Period |
| PSDG/NP/B/CO-OP/JA/01/2023 | Major Repair of Assistant Commissioner of Co-operative Development Office in District Co-operative Development Office at Jaffna | 4.60 | 45 Days | C9 or C8 or C7 (Buildings) | 3,500.00 | | 46,000.00 | Till 2023.10.23 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Chief Engineer's Office**
**Department of Buildings, NP,**
**Beach Road, Jaffna.**

(cr 37217) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருடனின் தாயிடம் சாத்திரம் கேட்டு எந்தப் பயனுமில்லை

## ஆளும் கட்சியின் பிரதம கொறடா தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 8

மக்கள் பிரதிநிதிகள் 225 பேரும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பங்களித்துள்ளனர்.

ஆகவே, திருடனின் தாயிடம் திருடன் யார் என சாத்திரம் கேட்டுப் பயனில்லை என்று அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாட்டின் நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான குழுவின் தலைவராக சாகர காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் விடுத்த அறிவிப்புத் தொடர்பில் இடம்பெற்ற தர்க்கத்தின்போது, இது திருடனின் தாயிடம் திருடன் யார் என சாத்திரம் கேட்பது போன்றது என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கையில்,

இந்த நாடு பொருளாதார நெருக்கடியில் இருக்கும் போது உதவுமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தோம்.

ஆனால் சில சமயங்களில் எதிர்க்கட்சிகள் தங்கள் சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலை செயற்படுத்துகின்றன. ஓர் அரசாங்கம் மட்டுமல்ல, 225 மக்கள் பிரதிநிதிகளும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பங்களித்துள்ளனர்.

எனவே, திருடனின் தாயிடம் திருடன் யார் என சாஸ்திரம் கேட்டும் பயனில்லை. இதை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளாமல் சபையின் பணிகளைத் தொடருமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ஒ-இ)

# முறிகண்டி பொலிஸ் காவலரண்; சேவை வழங்குவதில் அசமந்தம்!

## நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜுலை 8

மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக கிளிநொச்சி முறிகண்டியில் அமைக்கப்பட்ட பொலிஸ் காவலரண் மக்களுக்கு சேவையை ஆற்றுவதில் தவறுகின்றது. அதனால் முறைப்பாடுகளைச் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றோம் என அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இதுதொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் கூறுகையில்,

பிரதேச மக்கள் முறைப்பாடளிக்கச் சென்றால் கடமையில் எவரும் இல்லை. தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை நாடுங்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பிரதேச மக்கள் சேவையைப் பெற்றுக்கொள்ளச் செல்லும் சந்தர்ப்பங்களில் கடமை நேர பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஓய்வு உடையில் அரைகுறையாக நடமாடுவதால் முகம்சுழிக்க நேரிடுகிறது.

பொலிஸாரின் இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் பிரதிப்பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு குறித்த காவலரண் பொறுப்பதிகாரியை வினவியபோது, இவ்வாறான செயற்பாடுகள் இனிவரும் காலங்களில் இடம்பெறாது என்று உறுதியளித்தபோதும் இதுவரை எவ்வித பயனும் கிடைக்கவில்லை.

பிரதேச மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கத் தவறிய இந்தக் காவலரண் தேவையற்றதொன்றே. இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து பிரதேச மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை நீக்க வேண்டும் - என்றனர். (ச-113)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வியியற் கல்லூரியின்
விரிவுரையாளர்
**கலாநிதி சி.பத்மராஜா**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சின்னத்தம்பி சின்னம்மா**



அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 19.05.1934
மறைவு 06.07.2023

கல்லூரிச் சமூகம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.


# மலையகத் தமிழர் தோழமை இயக்கம் தமிழ்நாட்டில் அங்குரார்ப்பணம்

கொழும்பு, ஜுலை 8

தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசனை தலைவராகக் கொண்டு தமிழ்நாட்டில் மலையகத் தமிழர் தோழமை இயக்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தமிழ்நாடு திருச்சியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் மலையகத் தமிழர் தோழமை இயக்கத்தின் தலைமைக்குழு உறுப்பினர்களாக மனோ கணேசன், தலைவர் எம்.எஸ். செல்வராஜ், துணைத் தலைவர்கள் பி.டி. ஜோன், கே.ஏ.சுப்பிரமணியம், மிசா மாரிமுத்து, செயலர் சட்டத்தரணி தமிழகன், துணைச் செயலர்கள் சட்டத்தரணி ஈசன், டார்வின் தாசன் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

'இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க நாள்.

இலங்கையில் வாழும் இந்தியத் தமிழக வம்சாவளி மலையகத் தமிழரும், இந்தியத் தமிழகத்துக்குத் தாயகம் திரும்பியதாக சொல்லப்படும் தமிழகத்தில் வாழும் மலையகத் தமிழரும் அமைப்பு ரீதியாக ஒன்றுபடும் நாள்.

இதன்மூலம் இலங்கையில் வாழும் இந்தியத் தமிழக வம்சாவளி மலையகத் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களது அபிலாஷைகள் தொடர்பில் தமிழகத்தில் புதிய ஒளி பாய்ச்சப்படுகிறது. அதேபோல் தாயகம் திரும்பியதாகச் சொல்லப்பட்டு தமிழகத்தில்வாழும்மக்களின்துன்பங்களையும் அறியக் கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் ஏறக்குறைய 15 இலட்சம் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் வாழ்கிறார்கள். அதேபோல்தாயகம்திரும்பியதாக சொல்லப்படுவோர் தமிழகத்தில் 25 இலட்சம் பேர் வாழ்கிறார்கள். ஆக மொத்தம் 40 இலட்சம். இந்த 25 இலட்சம் பேருடன் சேர்த்து மொத்தம் 40 இலட்சம். இலங்கையில் குடியுரிமையுடன் வாழ்ந்திருக்க வேண்டும். வாழ்ந்திருந்தால் இலங்கை நாடாளுமன்றத்தில், நாம் 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்திருப்போம்' என்று மனோ கணேசன் உரையாற்றினார். (ஒ-இ)


# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
# கேள்வி அறிவித்தல் 2023

## பேயாடிகூழாங்குளம் வாகன சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதனுடனான கடைகள் -04, சிற்றுண்டி நிலையம்

01. வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்துள்ள பேயாடிகூழாங்குளம் வாகன சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதனுடனான கடைகள் -04, சிற்றுண்டிச்சாலை போன்றவற்றை 2023ஆம் ஆண்டு ஆவணி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 2026 ஆடி மாதம் 31ஆம் திகதி வரை நடாத்துவதற்கான கேள்விகள் 2023.07.27ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.
02. கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் வைப்புப்பணம், கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 2023.07.27ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி "செயலாளர்,வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா" என்ற முகவரிக்கும், ஒரு பிரதி "பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா" என்ற முகவரிக்கும் இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
03. 2023.07.27ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமூகமாக இருக்க அனுமதிக்கப்படும்.
04. கேள்விதாரர் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
05. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.
06. வாடகைக்காலம் 2023ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 2026ஆம் ஆண்டு ஆடி மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியினை கொண்டதாக இருக்கும்.
07. மாதாந்த கட்டுப்பணங்களை மாதம் முடிந்து ஐந்து நாட்களுக்குள் சபைக்குச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தவறின் தண்டப்பணம் அறவிடப்படும். அத்துடன் காலத்துக்குக் காலம் அரசாங்கத்தால் விதிக்கப்படும் VAT, NBT என்பனவும் செலுத்தப்படல் வேண்டும். இக்கால அவகாசத்திற்குள் மாதவாடகைப்பணத்தை செலுத்தத் தவறும் கேள்விதாரரின் வைப்புப்பணம் பறிமுதல் செய்வதுடன், கேள்வி விண்ணப்பம் சமர்ப்பித்து கேள்வியினை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு கேள்வி வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர்களது பெயர் கேள்விகோரும் தகுதியுடையவர்களின் நிரலிலிருந்து நீக்கப்படுவதுடன் கறுப்புப் பட்டியலிலும் சேர்த்துக் கொள்ளப்படும்.
08. கேள்வி அறிவித்தலுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைவாகவே கேள்விகளை அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரத்தில் கொடுக்கப்படும் விபரங்கள் உண்மையாகவும் சரியானவையாகவும் இருப்பதுடன் இவைகளை அத்தாட்சிப்படுத்தும் பொறுப்பும் கேள்விதாரரைச் சார்ந்தது. கேள்விப்படிவங்களைப் பெற முன்பும் அதற்குப் பின்பும் நிபந்தனைக்குரிய அத்தாட்சியினை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருப்பது அவசியமானது.
09. இங்கு அறிவிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒப்பந்த சரத்திற்கு அமைவாகவும் என்னால் காலத்திற்கு காலம் எழுத்து மூலம் விதிக்கப்படும் ஏனைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
10. யாதொரு காரணமும் காட்டாது கேள்வி முழுவதையுமோ, அல்லது கேள்வியின் பகுதியையோ ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கும் எனக்கும் உரிமையுண்டு.
11. உரிய நேரத்தில் கேள்விப்படிவங்களை சமர்ப்பிக்காத கேள்விதாரரின் கேள்விப்பிணைப்பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.
12. வாடகைக்கு எடுத்தவர் உபவாடகைக்கு விடுவது தெரியப்படும் சந்தர்ப்பத்தில் வாடகை உரிமை இரத்துச் செய்யப்படும்.
13. வாடகைக்கு எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
14. மேலே சொல்லப்பட்ட கேள்வி நிபந்தனைகள் அனைத்தையும் ஒப்புக்கொண்டே கேள்விகள் அனுப்புதல் வேண்டும்.
15. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாக சமூகமளித்து பெற்றுக்கொள்ளலாம்.

| விடயம் | | மாத வாடகை | கட்டட உடைவுப்பணம், இயந்திர தேய்மான பணம் | செலுத்த வேண்டிய மொத்த பணம் | கேள்வி வைப்பு | கேள்வி படிவக்கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| தொகுதி 01 | வாகன சுத்திகரிப்பு நிலையம் | 50,000.00 | 600,000.00 | 756,000.00 | 25,000.00 | 2,500.00 |
| | கடை01 | 3,000.00 | 36,000.00 | | 25,000.00 | 2,500.00 |
| | கடை02 | 3,000.00 | 36,000.00 | | 25,000.00 | 2,500.00 |
| | கடை03 | 3,000.00 | 36,000.00 | | 25,000.00 | 2,500.00 |
| | கடை04 | 4,000.00 | 48,000.00 | | 25,000.00 | 2,500.00 |
| தொகுதி 02 | சிற்றுண்டி நிலையம் | 2,500.00 | 30,000.00 | 30,000.00 | 25,000.00 | 2,500.00 |

செயலாளர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.
2023.07.08

(CR/37214)AH-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இலங்கையில் முதல்முறையாக

## விலங்குகளின் தரவுகள் சேகரிக்க புதிய செயலி

கொழும்பு, ஜூலை 8

விலங்குகளின் தகவல்கள் மற்றும் சிகிச்சை தொடர்பில் தரவுகளைச் சேமிக்கும் வகையில் புதிய செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் புதிய செயலியை இலங்கைத் தகவல் தொழில் நுட்ப நிறுவனத்தின் பேராசிரியர் கோலியா பூலசிங்க உள்ளிட்ட குழுவினர் உருவாக்கியுள்ளனர். இந்த செயலிக்கு 'பெற் பல்ஸ்' (Pet Pulz) என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தச் செயலியை கூகுள் ட்ரைவ் மூலம் கைபேசியில் தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இந்தச் செயலி தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவமனையிலும் கொழும்பில் உள்ள தனியார் கால்நடை மருத்துவமனையிலும் பயன்படுத்தப்படுகிறது.

மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பப்படும் விலங்குகளின் தரவுகள் தொடர்புடைய விண்ணப்பத்துடன் சேர்க்கப்பட்டு, விலங்குகளின் நோய் நிலைமைகள், சிகிச்சை போன்றவை இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

அதன்படி, கால்நடை மருத்துவர் விலங்குக்கு மீண்டும் சிகிச்சை அளிக்கும்போது, செயலி மூலம் கடந்த காலத் தகவல்களை எளிதாகப் பார்க்கமுடியும் என பேராசிரியர் கோலிய பூலசிங்க தெரிவித்தார். (ச-ரி3)

## உயர்தரச் சான்றிதழ்களுக்கான ஊடகக்கற்கை வவு.பல்கலையில்

### துணைவேந்தர் தெரிவிப்பு

மன்னார், ஜூலை 8

ஊடக மற்றும் இதழியல் கற்கைநெறிகளுக்கான உயர்தரச் சான்றிதழ்கள் வழங்கும் நோக்கத்துடன் தமிழ்மொழிமூலம் ஊடகக் கற்கைநெறி வவுனியா பல்கலைக்கழகத்தில் கடந்த மே மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஊடகத்துறையில் சிறந்து விளங்க இந்தக் கற்கைநெறியில் இணையலாம் என துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தக் கற்கைநெறியில் தற்போது ஊடகவியலாளர்களாக இருப்போர், எதிர்காலத்தில் ஊடகத்துறையில் இணைய விரும்புவோர் ஆகியோர் இணையலாம்.

வடபகுதியிலுள்ளவர்கள் ஊடகத் துறையை சரியாகக் கற்று ஊடகத்துறை ஊடாக சரியான தகவல்கள், செய்திகள் மூலம் மக்களின் பிரச்சினைகளை உரிய முறையில் வெளிக்கொண்டு வருவதற்கு இந்தக் கற்கைநெறி சிறந்த பங்களிப்பைச் செய்யும்.

இந்தப் பாடநெறியை நிறைவு செய்பவர்களுக்கு உயர்தர கற்கைச் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் எதிர்காலத்தில் இதனை டிப்ளோமா கற்கை நெறியாக தரம் உயர்த்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-ரி2 -213)



சாவகச்சேரி வடக்கு, மண்டுவில் இலஞ்சியாரணியம் கண்ணகை அம்பாள் ஆலய மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை அடியவர்கள் சூழ சிறப்புற இடம்பெற்றது. (ச-131)



ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் கடந்த 26ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற வலய மட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் காரைநகர் இந்துக் கல்லூரி அணியினை தோற்கடித்து அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய அணி இவ்வருட சம்பியனாகியது. (ய-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் விளையாட்டு விஞ்ஞான அலகினால் சர்வதேச யோகாதினநிகழ்வுகடந்த23ஆம் திகதி வெள்ளிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் முன்னெடுக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் கலந்துகொண்டு யோகாசனத்தை மேற்கொண்ட மாணவர்களும் அதிபர்களும் கௌரவிக்கப்பட்டனர்.
நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜாவும் கலந்துகொண்டார். (ய-125)



## ஜனாதிபதித்...

பின்னர்தான் எந்த வேட்பாளரை நான் ஆதரிப்பேன் என்பதைப் பகிரங்கமாகக் கூறுவேன் - இவ்வாறு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.
'அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கதான் என்று ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்கள் கூறுகின்றார்கள். அப்படி அவர் களமிறங்கினால் நீங்கள் அவரை ஆதரிப்பீர்களா?' என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'இன்னும் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படவில்லை. வேட்புமனு கோரப்படவில்லை. தேர்தலுக்குக் காலம் உண்டு. அதனால் இப்போது அதுபற்றித் தீர்மானிக்க முடியாது. ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டால் அந்த நேரத்தில்தான் முடிவெடுப்போம். தேர்தலுக்கு முன் எதுவும் நடக்கலாம். இப்போது ஒரு தீர்மானம் எடுத்தாலும் அதைத் தேர்தலில் மாற்ற வேண்டி ஏற்படலாம். அதனால் தேர்தல் அறிவிக்கப்பட்டபின்னர்தான் முடிவெடுப்பது ஆரோக்கியமானது' - என்றார். (அ-ம-22)

## ஊடகவியலாளர் தனபாலசிங்கத்தின் தந்தை காலமானார்!



தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும், ஊடகவியலாளருமான தனபாலசிங்கத்தின் தந்தையார் ஓய்வுபெற்ற தபால் திணைக்கள அலுவலர் ஆழ்வார் வீரகத்தி (வயது -91) நேற்றுக் காலமானார்.
சிறிதுகாலம் சுகவீனமடைந்திருந்த அவர் நேற்றுக் காலமானதாக அவரது குடும்பத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர். அவரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் சொந்த ஊரான வடமராட்சி, கரவெட்டியில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# வடக்குக் கல்வி அமைச்சின் செயலராக பற்றிக் டிறஞ்சன்

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக பற்றிக் டிறஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.
வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக இதுவரை காலமும் கடமையாற்றிய உமாமகேஸ்வரன் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளராகப் பதவியேற்றுச் சென்ற நிலையில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே பற்றிக் டிறஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.
எதிர்வரும் புதன்கிழமை அவர் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார் என்று தெரியவருகின்றது. இவர், உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகிய பொறுப்புக்களை இதற்குமுன்னர் வகித்திருந்தார். (அ-ம-125)


## பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மூத்த பெண் பிரஜை ஒருவரை, தங்கிநின்று பார்க்கக்கூடிய பெண் பணியாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்பு:- 021 4927 475**



## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 05 . 1978 — மறைவு 06 . 07 . 2023



### முத்துக்குமாரசாமி கணேஸ்வரன் (குட்டி)

**(உரிமையாளர் - கிசான் ரூர்ஸ் அன்ட் ரவல்ஸ்,**
**முன்னாள் உரிமையாளர் - வேணுகா உணவகம், கைதடிச் சந்தி)**

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், கைதடிச் சந்தியை வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரசாமி கணேஸ்வரன் அவர்கள் கடந்த (06.07.2023) வியாழக்கிழமை இரவு இறைவனடி சேர்ந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசாமி மனோன்மணி தம்பதியரின் பாசமுள்ள மகனும், இராசையா காலஞ்சென்ற ஞானகியம்மா தம்பதியரின் பாசமுள்ள மருமகனும், இராஜசிறி அவர்களின் அன்பிற்கினிய கணவரும், கஜந்தினி, வேணுகா, கிஷானன் (யாழ். கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம் - மாணவன்(O/L), கிருஷா (யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் - மாணவி தரம் - 07) ஆகியோரின் பாசத்திற்குரிய தந்தையும், சிவசெல்வனின் (SLGTI அறிவியல்நகர், கிளிநொச்சி, Instructor - Department of Food Technology) அன்பான மாமாவும், ஜமுனா, நிர்மலா, மகேஸ்வரன், கோணேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இரவிவர்மன் (லண்டன்), இராஜினி (கொழும்பு), இராசவர்மன் (பரந்தன்), காலஞ்சென்ற ரூபவர்மன் ஆகியோரின் அன்பான மைத்துனரும், மலர்விழி (லண்டன்), காஞ்சனா பெரேரா (கொழும்பு), தர்மினி (பரந்தன்) ஆகியோரின் சகலனும், சிவஞானசோதி, ஆனந்தராசா, தனலட்சுமி ஆகியோரின் அன்பிற்கினிய மைததுனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் கைதடி கிழக்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கைதடி ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"ஞானோதயம்"**
**கைதடி கிழக்கு.**

**தகவல்: மருமகன்**
**சிவசெல்வன் (செல்வா)**
**077 051 4632, 075 0514 832**


## INVITATION FOR BIDS TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Repair works at NTS. | 1500.00 | 153,000.00 | 91 | 3.0 | C8 |
| 2. | Renovation of male section in ward 24. | 1500.00 | 246,000.00 | 91 | 4.9 | C8 |
| 3. | Renovation of female section in ward 24. | 1500.00 | 194,000.00 | 91 | 3.8 | C8 |
| 4. | Roof working for patient waiting area at ward 24, changing Timber Door at Dialysis unit, Casualty Operation Theater. | 1500.00 | 77,000.00 | 91 | 1.5 | C9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction. Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office CECB,Jaffna during office hours. if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language [illegible] purchased by Interested Bidders from Director, Teaching Hospital. Jaffna upon producing [illegible] registration book and receipt for the cash payment for the bid [illegible] 10.07.2023 up to 21.07.2023 during office hours. The payment shall be made to the Shroff's Office. Teaching Hospital. Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before [illegible] hrs on 24.07.2023, late bids will be rejected. Bids will be open at Director's Office Teaching Hospital. Jaffna soon after closing in the presence of bidders [illegible] representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee.**
**Teaching Hospital, Jaffna.**
**07.07.2023.**

(cr.37213) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூர்...

இலங்கை ஒரு சிங்கள நாடு என்பதை முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி விளங்கிக்கொள்ளவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய நல்லிணக்கத்துக்கும், தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் செயற்பாடுகள் தற்போது தீவிர மடைந்துள்ளன. இலங்கை சிங்கள-பௌத்த நாடு. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 2 ஆயிரம் வருடகால பழமையான தொல்பொருள் மரபுரிமைகள் பரவலாகக் காணப்படுகின்றன. குருந்தூர்மலையில் பௌத்த மரபுரிமைகள் உள்ளன.

குருந்தூர்மலைக்கு நாங்கள் அண்மையில் சென்றிருந்தபோது அவ்விடத்துக்கு வருகை தந்திருந்த முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி நாங்கள் விசாரணைக்கு இடையூறு விளைவிப்பதாகக் குறிப்பிட்டு எம்மை வெளியேறுமாறு குறிப்பிட்டார். அத்துடன் குருந்தூர் விகாரையில் வழிபாட்டில் ஈடுபட வருகை தந்த பௌத்த தேரரையும் வெளியேறுமாறு குறிப்பிட்டார். நீதிபதியின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ளமுடியாது.

குருந்தூர்மலை விகாரையின் தொல்பொருள் மரபுரிமை தொடர்பில் கேள்வி எழுப்பும் அதிகாரம் இந்தத் தமிழ் நீதிபதிக்கு கிடையாது. அத்துடன் குருந்தூர் மலையில் இருந்து வெளியேறுமாறு குறிப்பிடும் அதிகாரமும் அவருக்கு இல்லை. இலங்கை சிங்கள - பௌத்த நாடு என்பதை தமிழ் நீதிபதி நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் திட்டமிட்ட வகையில் பௌத்த மரபுரிமைகள் அழிக்கப்படுகின்றன. அதற்கு ஒருசில நீதிபதிகளும் ஆதரவு வழங்குகிறார்கள். முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி அரசியலமைப்பின் 9ஆவது அத்தியாயத்தை முழுமையாக மீறியுள்ளார் என்பதையும் உயரிய சபை ஊடாக குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளை அழித்து அதன் மீது திரிசூலம் உட்பட மத அடையாளங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. குருந்தூர் மலையிலும் இவ்வாறான தன்மையே காணப்படுகிறது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளை பாதுகாக்க சிங்கள - பௌத்த மக்கள் ஒன்றிணையவேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்று குறிப்பிடப்படுகிறது. தமிழ் - பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்றால் ஏன் பௌத்த மத மரபுரிமைகளை அழித்து அதன் மீது திரிசூலத்தை அமைக்கவேண்டும்? வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளை பாதுகாக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தவேண்டும் - என்றார்.

**நடந்தது என்ன?**

முல்லைத்தீவில் உள்ள குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளைகளை மீறி விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது என்று குருந்தூர்மலை ஐயனார் ஆலய நிர்வாகம் சார்பில் கடந்த மார்ச் மாதம் 2 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 4ஆம் திகதி விசாரணைக்காக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. நீதிமன்ற விசாரணைகளின் ஒருபகுதியாக சட்டவிரோத விகாரைக் கட்டுமானங்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படும் பகுதிக்கு நீதிபதி ரி.சரவணராஜா நேரில் சென்றார். நீதிபதியுடன் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளும் உடன்சென்றனர். இதன்போது சமநேரத்தில் குருந்தூர்மலைக்கு வந்த சரத் வீரசேகர, நீதிபதியிடம் தன்னை அறிமுகப்படுத்தி கருத்துச்சொல்ல முற்பட்டபோது, அவரது கருத்தினை ஏற்கமறுத்த நீதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர்களோ, அரசியல்வாதிகளோ இங்கு கருத்துத்தெரிவிக்க முடியாதெனவும், இங்கு நீதிமன்ற விசாரணையே இடம்பெறுவதாகவும், அங்கிருந்து சரத் வீரசேகரவை விலகிச் செல்லுமாறும் எச்சரித்தார். அதனைத் தொடர்ந்து சரத் வீரசேகர அங்கிருந்து விலகிச் சென்றார்.

நீதிமன்றத்தில் வழக்கு அழைக்கப்பட்டு, அதன் ஒருபகுதியாக நீதிபதி கள விசாரணை செய்வது நீதிமன்ற நடவடிக்கையே. எனவே அவ்வாறு நீதிமன்ற நடவடிக்கை இடம்பெறும்போது, குருந்தூர்மலை தொடர்பில் இனவாதக் கருத்துக்களை வெளிப்படுத்தும் சரத்வீரசேகர தனது நாடாளுமன்ற சிறப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி கருத்துக்களை நீதிபதியிடம் திணிப்பதற்கு அணுகியமை உச்சக்கட்ட சிறப்புரிமை மீறல் என்று பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம)

## உண்மையை...

நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 'இலங்கை அரசே கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி தொடர்பான உண்மை, நீதி, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்து ' எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட பொதுமக்கள், பொது அமைப்புகள், சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தினர் இணைந்துகொண்டனர்.

'சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையிலும், சர்வதேசக் கண்காணிப்பின் கீழும் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் அகழ்வுப்பணிகள் இடம்பெறவேண்டும்' என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினர். (அ-ம-246)

## 48 மணிநேரத்துக்குள்...

தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'எப்போது புதிய பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படுவார்?' என்று சபையில் உரையாற்றும்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஆகியோர் கேள்விகளை எழுப்பியிருந்தனர். இதற்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார். அரசியல் சாசன சபையை எந்த நேரத்திலும் சபாநாயகரால் கூட்ட முடியும் எனவும், ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அனுமதி பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (அ-ம-22)

## சீனித்தொழிற்சாலை...

பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

வவுனியாவில் சீனித்தொழிற்சாலையை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை தொடர்பில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியாவில் அந்நிய முதலீட்டுடன் பெரும் சீனித் தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கும், அதற்குரிய கரும்புத் தோட்டங்களை அமைப்பதற்கும் அமைச்சரவை அண்மையில் அவசர அவசரமாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அத்தோடு, தொழிற்சாலையின் அமைவிடத்துக்கென கரும்புத் தோட்டங்களை அமைப்பதற்காக முதற்கட்டமாக 74 ஆயிரத்து 100 ஏக்கர் அளவு காணியை விடுவிக்கவும் அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ள தரப்பினர், இது போரினால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கென வராதுவந்த வரப்பிரசாதம் என்று இனிப்பாகச் சிலாகித்து வருகின்றனர். ஆனால், இதன் உண்மைகள் மிகவும் கசப்பானவை. வடக்கில் சீனித் தொழிற்சாலை, இனிப்புத் தடவிய விஷம்.

**வவுனியா பாலைநிலமாகும்**

அபிவிருத்தித் திட்டமொன்றை முன்னெடுக்கும்போது திட்டத்தின் பொருத்தப்பாட்டை அறிந்துகொள்ள நீர் அடிச்சுவடு என்ற நீர்த் தேவையே சூழலியல் குறிகாட்டியாக முதலில் கவனத்தில் கொள்ளப்படுகிறது. கரும்பினதும் சீனியினதும் நீர் அடிச்சுவடு மிகவும் உயர்வானது. ஒருகிலோ கரும்பை உற்பத்தி செய்வதற்கு 210 லீற்றர் தண்ணீரும் ஒரு கிலோ சுத்திகரிக்கப்பட்ட சீனியை உற்பத்திசெய்வற்கு ஆயிரத்து 780 லீற்றர் தண்ணீரும் தேவைப்படுகிறது. கரும்பு வருடம் முழுவதும் நீர் பாய்ச்ச வேண்டிய ஒரு பல்லாண்டுப் பயிராகும். இவற்றின் அடிப்படையில் பேராறுகள் எதுவுமே இல்லாத வறண்ட வலயமான வடக்கில் பெருமளவு நீரை விழுங்கும் சீனி உற்பத்தியை முன்னெடுப்பது பேராபத்தாகும். நீர்ச் சமநிலையைக் குழப்பி அத்தியாவசிய உணவுப் பயிர்களின் உற்பத்தியிலும் இது பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும். ஈற்றில் அந்த மண்ணைப் பாலைநிலமாக்கிவிடும்.

**மக்களை நோயாளராக்கும் திட்டத்துக்கே அனுமதி!**

கரும்பு, மிக அதிகளவில் இரசாயன உரங்களையும், பீடை கொல்லி, களை கொல்லி, நஞ்சுகளையும் வேண்டி நிற்கும் ஒரு பயிராகும். தொடர்ச்சியாக விவசாய இரசாயனங்களால் குளிப்பாட்டப்படும்மண்ணில்நுண்ணங்கிகள்அழிந்து தொடர்ந்து பயிரிட முடியாதவாறு மண் மலடாகிவிடும். கந்தளாய் சீனி தொழிற்சாலை மூடப்பட்டிருப்பதற்கு, கரும்பில் இருந்து இனிமேலும் அதிக விளைச்சலை பெறமுடியாதவாறு நிலம் தரம் இழந்துபோனதும் ஒரு காரணம்.

விவசாய இரசாயனங்கள் நீரோடு கலந்து குடிதண்ணீரையும் மாசடையச்செய்கிறது. வவுனியா ஏற்கனவே சிறுநீரக நோய்கள் ஆபத்து அதிகமாக உள்ள மாவட்டமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. விவசாய இரசாயனங்கள் கலந்த குடிதண்ணீரை அருந்தியதால் ஏராளமானோர் சிறுநீரகங்கள் செயலிழந்து அவதிப்படுகின்றனர். இந்நிலையில், கரும்புச் செய்கை வவுனியாவின் நிலத்தினதும் மக்களினதும் ஆரோக்கியத்துக்கு பெருங்கேடாகவே முடியும்.

**காடழிப்புக்கு ஊக்குவிப்பா?**

கரும்புச் செய்கைக்கும் சீனி தொழிற்சாலைக்கும் ஒதுக்கப்பட்ட காணியின் அளவு, வவுனியாவின் மொத்தப் பரப்பில் ஆறு சதவீதத்துக்கும் அதிகம். இந்தப் பெரிய இடத்தை காடுகளை அழித்தே பெறமுடியும். மக்கள் போரினால் இடம் பெயர்ந்ததன் காரணமாக கைவிடப்பட்ட மேய்ச்சல் தரைகளையெல்லாம் அங்கு மரங்கள் வளர்ந்ததைக் காரணம் காட்டி, காடுகள் என எல்லைகளை வரையறுத்த வனவிலங்கு திணைக்களம் இப்போது அதே காடுகளை கரும்புச் செய்கைக்கு விடுவிப்பதற்கு இணங்கியுள்ளது.

காலநிலை மாற்றங்களால் பாதிக்கப்படப்போகும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் அடங்கியுள்ளதைக் கருத்திற்கொள்ளாமல், காடுகளை அழித்து சீனித் தொழிற்சாலையை அமைப்பது குருட்டுத்தனமான முடிவாகும். இது தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை அபிவிருத்தி என்ற பெயரால் நிரந்தரமாகவே கையகப்படுத்தும் ஒரு தந்திரமுமாகும். சீனி தொழிற்சாலை சிங்கள குடியேற்றத்துக்கும் வித்திடும் என்ற சந்தேகமும் உள்ளது.

**மற்றொரு மகாவலியா?**

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கம் விவசாயத்தை மேம்படுத்தல் என்று சொல்லப்பட்டபோதும் அதன் உள்ளார்ந்த நோக்கம் சிங்களக் குடியேற்றமாகும். அதுவும், குடியேற்றப்படும் இடத்தின் இன விகிதாசாரப்படி இல்லாமல், இலங்கையின் இன விகிதாசாரத்தின்படியே குடியேற்றங்களை மேற்கொள்வது மகாவலி அதிகார சபையின் எழுதப்படாத அதிகாரம்.

மகாவலியுடன் இணைக்கப்பட்ட கந்தளாய் குளத்தை மையப்படுத்தி நிகழ்ந்த பயிர்ச்செய்கையே தமிழ் நிலமான கந்தளாயை இன்று முற்றுமுழுதாக சிங்களவர்களின் நிலமாக்கியது. வவுனியாவிலும் 'கரும்புக்கு நீர் பாய்ச்சுகிறோம்' என்று சொல்லி வவுனியாவின் குளங்களோடு மகாவலியை தொடுத்து நிலங்களை மகாவலி அதிகார சபை தன்வசமாக்கலாம். மகாவலியில் நீர்வரத்து இருக்கிறதோ, இல்லையோ இதனூடாக சிங்களக் குடியேற்றம் வருவதற்கான வாய்ப்பு மிக அதிகமாகவே உள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட எம் மக்களின் வாழ்வை மேம்படுத்த அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது அவசியம். ஆனால், வடக்கின் மண்ணுக்கும் மக்களுக்கும் பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்கள் எத்தனையோ இருக்கும்போது எவ்விதத்திலும் பொருந்தாத சீனித் தொழிற்சாலையை வரவேற்பது அறிவுடையோரினதோ, தமிழ்த் தேசியப் பற்றாளர்களினதோ செயலாக இருக்காது.

நீண்ட நெடிய வலி மிகுந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த இனம் நம்முடையது. இப்போராட்டம் எதிர்கால சந்ததியின் வளமான வாழ்வுக்காக மண்ணின் வளங்களை காப்பாற்றி, அவர்களிடம் கையளிப்பதையும் உள்ளடக்கியதே ஆகும். மண் மீட்கப் புறப்பட்ட நாம் அந்தமண் பாலைநிலமாவதற்கோ மலடாவதற்கோ எதன் பொருட்டும் அனுமதிக்க முடியாது - என்றார். (அ-ம)

## இராட்சதக்...

தலைமன்னார் மற்றும் நடுக்குடா கடற்படையினர் கரை ஒதுங்கிய கப்பலுக்கு பாதுகாப்பளித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கப்பலில் எவராவது உள்ளனரா? இந்தக் கப்பல் கைவிடப்பட்ட கப்பலா போன்ற விவரங்கள் நேற்று இரவு வரை தெரியவரவில்லை. (அ-ம-213)

## தேசபந்துவின்...

லில் முன்னெடுக்கப்பட்ட அரகலய போராட்டத்தின்போது, போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளைக் கருத்திற்கொண்டே அவருக்கு நாட்டைவிட்டு வெளியேறத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் இந்தத் தடையுத்தரவை நேற்று நீக்கியுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### கும்பாபிஷேகத்தில்...

யாழ்ப்பாணத்தில் பிரபலமான ஆலயங்களின் திருவிழாக்களின் போது, நகைகள் காணாமற்போவது மற்றும் களவுபோவது அண்மைக்காலமாக அதிகரித்து வருவதால், அவற்றை அணிந்து செல்வதைத் தவிர்க்குமாறு பொலிஸார் அறிவுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)

### தேசிய...

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில், வடக்கு மாகாணஅணியை எதிர்த்து தென்மாகாண அணி மோதியது. இதில் வடக்கு மாகாண அணி 2:1 என்ற கோல் கணக்கில் சம்பியனானது. வடக்கு மாகாண அணிசார்பில், குருநகர்பாடும்மீன்கழக வீரரும், தேசிய வீரருமான கீதன் இரண்டு கோல்களையும் பதிவுசெய்தார். (ம-27)


## வேலையாள்கள் தேவை

தங்கி நின்று சமையல் செய்வதற்கும்,
தங்கி நின்று பூங்கன்று பராமரிப்பு
வேலை செய்வதற்கும்
03 வேலையாள்கள் தேவை.

**075 944 4601**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும்

* பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* சுன்னாகம் சாவகச்சேரி செல்லும் அரச தனியார் பேரூந்துகள் அதிகம் பயணிக்கும் பிரதான வீதி.
* காபற் வீதி முகப்புடன் ஒரு பரப்பு மூன்று இலட்சம் ரூபாய் பின் துண்டுகள் 1 பரப்பு ஒரு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் மட்டும்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.

**தொடர்பு:**
**076 8260 354, 076 0570 354**

## பணிப்பெண் தேவை

வயோதிபத் தாயொருவரை பகல் பொழுதில் பொறுப்பாகப் பராமரிக்கக்கூடிய பணியாளர்கள் (பெண்கள்) தேவை.

**தொடர்பு:- 077 9590 793**

## பணியாளர்கள் தேவை

கொக்குவில் சந்தியில் இயங்கும்
**பாக்யா காகிதாதிகள்**
நிலையத்துக்கு விற்பனை
உதவியாளர்கள் தேவை.
(பெண்கள் மட்டும்)

121, K.K.S வீதி, கொக்குவில்.
075 041 5858


## மரண அறிவித்தல்

பிறப்பு 08 • 06 • 1947



இறப்பு 04 • 07 • 2023

# கு.வி.பஞ்சலிங்கதுரை

புங்குடுதீவு - 5 ஆம் வட்டாரம் இருபிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்நகரை வாழ்விடமாகவும், இங்கிலாந்து Fareham நகரில் வசித்தவருமான கு.வி.பஞ்சலிங்கதுரை கடந்த (04.07.2023) செவ்வாய்க்கிழமை தனது தாய்மண்ணான புங்குடுதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் தையல்முத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற யாழ். கந்தர்மடத்தைச் சேர்ந்த சீனிவாசகம் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயகாந்தா (ரூபி - U.K) அவர்களின் பாசமிகு கணவரும், மது (U.K) சாயீசா (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தகோபன் (U.K) சசிகரன் (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஞ்சலி, ஜெய்டன், லேயா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான கு.வி.செல்லத்துரை (முன்னாள் அதிபர்), கு.வி.தம்பித்துரை (கலைவாணி) மனோன்மணி, ரஞ்சிவிசுவலிங்கம், கு.வி. மகாலிங்கதுரை, கமலாம்பிகை, கு.வி. அமிர்தலிங்கதுரை ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பரிமளம் (முன்னாள் அதிபர்), புஸ்பமணி, முத்துத்தம்பி (முன்னாள் அதிபர்), கனகரஞ்சி, கனகசபை, தர்மவதி மற்றும் மனோகரன் (கனடா), மகேந்திரன் (கனடா), ஜெய்மங்களம் (கனடா), ஜெயநாயகி (இலங்கை), கிரிதரன் (கனடா), நாகராணி (தங்கா- கனடா), ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

* இங்கிலாந்தில் நடைபெறவுள்ள அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.
* நாளை (09.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 - 11.30 மணிவரை புங்குடுதீவில் வட இலங்கை சர்வோதய புஸ்பா மணிமண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்

## யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கம்

**Jaffna Health Service Co - operative Thrift Saving & Credit Society**

பதிவு இல. Regd No : J - 1339 - of 15.09.55

| கு. உமாகாந் | சி. சிவகுமார் | இ. உதயகுமார் |
|---|---|---|
| கௌரவ தலைவர் | கௌரவ காரியதரிசி | கௌரவ தனாதிகாரி |

# வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும்

யாழ். சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின்

# 61 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

நாளை (09.07.2023) ஞாயிற்றுக்கிழமை
தாதியர் பயிற்சிக் கல்லூரி
யாழ். போதனா வைத்தியசாலையில்
காலை 9.30 மணிக்கு நடைபெறும்

என்பதனையும் சகல அங்கத்தவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சி.சிவகுமார்
காரியதரிசி

(cs.51157) N.1)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

### நிலப்பரப்பு

- ✔ நவக்கிரி மாணிக்கப் பிள்ளையார் கோயில் வீதியில்.
- ✔ 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✔ 3 வருடம் பூர்த்தி அடைந்த தென்னைகளும் உள்ளன.
- ✔ நிலாவரை வற்றாக் கிணற்றில் இருந்து 1 km தூரம்.
- ✔ நன்னீரூற்றுச் சூழல்
- ✔ 1 பரப்பின் விலை 1200000/= (பன்னிரண்டு இலட்சம்)

**பார்வையிடும் நேரம் :-**
காலை 6.00 மணி தொடக்கம்
மாலை 6.00 மணிவரை.

**தொடர்புகளுக்கு :- ஜெயம்**

**077 81 47 389**
**077 98 65 457**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.